108

ஓம்ஸ்ரீபரப்பிரம்மணே நம:

சர்வசமய சமரஸ சதாசாரம்,

சமரஸம்.

என்னும்

சிறந்த தமிழ் மாதாந்தபிரசுரம்.

OFFICE OF THE REGISTRAR
OCT 1926
MA

சாது குழவி	அக்ஷய௵ ஆவணி௴ 1௳ 1926௵ ஆகஸ்டு௴ 16௳	வயது 1 மாதம் 3.

வருடசந்தா ரூ. 1—0—0.

Edited & Published by

M. A. VARADARAJA MUDALIAR.

1926.

ஹனுமான் அச்சியந்திரசாலை விழுப்புரம்

OFFICE OF THE REGISTRAR
4 OCT 1926

ஓம் பரப்பிரம்மனே நம:

சமரஸம்.

சாது குழவி | 1926வரு ஆகஸ்டுமீ 16 அட்சயவரு ஆவணிமீ 1 | வயது 1 மீ 3

வாய்மை.

உள்ளத்தாற் பொய்யாதொழுகி னுலகத்தா
ருள்ளத்து ளெல்லா முளன். குறள்.

வாய்மை-உண்மை சொல்பவன் இம்மையிற் பொருளையும் மறுமையிற் புண்ணியலோகத்தையும் அடைவான். உண்மைக்கு மாறுனது பொய். பொய்யாவது உள்ளதை இல்லதாகவும், இல்லதை உள்ளதாகவும் சொல்லல். பொய் மிக இழிவுள்ளது. ஒரு பொய் சொல்லி அதை ஸ்தாபிக்கப் புகின் ஒன்பது பொய் சொல்லல்வேண்டும். 'நான் சொன்ன பொய்யை பொறுத்துக் கொள்ளவேண்டும்' என்று கெஞ்சி கேட்பானுயின் ஒரு பொய் யோடொழியும். பொய் சொல்லத் துணிகிறவன் களவு முதலிய பஞ்சமாபாதகங்களை செய்ய அஞ்சான். பொய் சொல்லலாகிய பாவமொன்றை யொழிப்பின், அதுவழியாக மற்ற பாவமெல்லாம் ஒழியும். பொய்யன் மெய் சொன்ன போதிலும் பிறர் அதனை நம்பார்.

மெய் சொல்வதினுலே சில கஷ்டங்களும் கேடுவந்துற்றாலும் அவனுள்ளத்திற் மகிழ்ச்சி யுண்டாகும். அவன் பகைவரும் அவனை நன்கு மதிப்பார்கள். பெரிய மனிதர்களுடைய நிலைமையில் தன்னை யுயர்த்தவும் தன் காரியங்களை சித்தி பெறவும் விரும்பினுல் தான் நெஞ்சறிய பொய் சொல்லாதிருக்கவேண்டும் சத்தியத்தின் மிக்க தருமமும் அசத்தியத்தின் மிக்க பாவமுமில்லை. சத்தியமாய் பேசுவதைக் காட்டிலும் தானமும், தருமமும், புகழும் மேலானதல்ல. சுருங்கக்கூறின் உண்ணுமற் தவஞ்செய்பவரினும், பொருள் சம்பாதிப்பதில் வருத்தப்பட வேண்டிய முயற்சியினும் ஏற்படக்கூடிய கஷ்டங்களினும் வாய்மை மேலான கீர்த்தியை யளிக்கும்.

யாமெய்யாக் கண்டவற்றுளில்லை
வாய்மையி னல்ல பிற—குறள்.

ஒற்றுமை (17-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஆற்றின் படுகையிலுள்ள நாணலுக்கொப்பானவர்கள். அவர்களுக்கு கூடவா ஒற்றுமையென்னும் கதிமோக்ஷம் திறக்கப்போகிறது என்று ஆச்சரியமாக கூறிக்கொண்டுவருகின்றனர். இத்தேயத்திலும் சிலர் அதில் நம்பிக்கைபாராட்டுகின்றனர். சிலர் இந்து மதம் ஒன்றுபடவேண்டுமானால் அது கிறிஸ்த்து மதமாக மாறினால்தான் என்பர்: வேறு சிலர் இஸ்லாமிய மதமே என்பார். இப்படி சில நாட்களுக்குமுன் பிடிவாதமாய் சொல்லப்பட்டிருந்தபோதிலும், காலத்தறுவாயில் சமரஸ பாவம் ஏற்பட்டிருக்கின்றது. இப்பொழுதுகூட சில நொண்டி முனிகளின் கூற்றுகள் சில சமயங்களில் கிளம்பி வெளியாகின்றன. மற்றொரு வர்க்கத்தார் இந்தியர் ஒன்றுபட்டால் நமக்கு பிழைப்பேது உணவேது என்று கலங்குகிறார்கள்.

இந்தியா ஒற்றுமையுடன் வாழவேண்டுமானால் இங்கு கூறப்படும் சில மூலகாரணங்களை கவனித்தல் வேண்டும் அவையாவன. தேசபக்தி பொதுவான நோக்கம், பிறநலம், ஆண்மைத்தனம், சத்தியத்தில் பிடிவாதம், நியாயத்திற்காவது, மனச்சாக்ஷிக்கு விரோதமான விஷயங்களை எக்கஷ்டம்வரினும் தடுக்கும் குணம், மனோபாவத்தில் தாழ்ந்த நிலைமையிலுள்ளவர்களை சுபாவமாகவோ முயற்சியினாலோ வளரவிடுவது. புது உள்ளமும் புதிய வாழ்க்கையில் ஆசையும் ஏற்படும். மேலோர்களின் புத்திகோசரமெல்லாம் கீழோரையும் ஆதரவற்றவர்களையும் சமான முறையில் ஆதரிக்கும் சுவாபம் விரைவாக ஊர்ந்து செல்லும். அஃது அவ்வாறின்றி வேற்றுமையான நோக்கத்துடன் பிளவுபட்டு வாழுமானால் தாய் நாட்டின்மீது வெறுப்பு, நந்நலம், தன் குடும்பமும் தானும் வாழ்வதிலேயே சதா நோக்கம், அதனால் ஏற்படும் பேடித்தனம் பேடித்தனத்தினால் உண்மையான முறைகளை கையாட முடியாமல் அசத்தியபிரயோகம். அசத்தியமே துணையாக கொண்டுள்ள பிரஜைகள் நியாய விரோதத்தையாவது மற்றவர்களால் அல்லது அந்நியநாட்டாரிழைக்கும் மனச்சாக்ஷிக்கு விரோதமான காரியங்களை எதிர்க்கக்கூடிய துணிவின்மை. தங்கள் நிலைமையே இவ்வாறிருக்க இப்படிப்பட்ட பிரஜைகள் தங்களுக்குகீழுள்ளவர்களைகல்வியிலும்,செல்வத்திலும் உயர்த்த எவ்வாறு சக்தியுள்ளவர்களாவார்கள். அதனால் ஊக்கம் குறையும். ஊக்கமின்மையேல் புதியவாழ்க்கை கனவுபோல் தோன்றி கடவுளால் மனிதசமூகத்துக்கு அளித்திருக்கும் சமத்துவ உரிமையை இழந்து அந்நாட்டில் என்னேரமும் அழுகைகுரலோசையின் கண்ணீர் பெருக்கு மெடுத்து மனித வர்க்கபடியினின்று தாழ்த்தப்படுகின்றார்கள்.

உலகம் உண்டானது முதற்கொண்டே நாகரீகக் கல்வி விளங்க ஒற்றுமையாய் வாழ்ந்த இந்திய மக்களாகிய பூர்வீக பிரஜைகளில் தன்னலமற்ற பூமியில் தன்னுயிர்க்காக மன்னுயிர்களை வழங்கின வெள்ளத்தை பாய்ச்சி நியாயத்தையும் சத்தியத்தையும் நிலைநாட்டவேண்டி தாங்கள் செய்திருக்கும் அபூர்வச் செயல்களென்னும் உழைப்பில் இப்பொழுது ஞாபகச்சின்னமாயிருக்கிறதும் உலகம் புகழக்கூடியதாயுமிருக்கிற தெய்வபக்தி தத்துவ ஆராய்ச்சி, இந்தியருக்கல்லாமல் உலகத்தவருக்கே உதாரணமாக காட்டி யொழுகிய புண்ணிய ஆத்மாக்களின் சரித்திரங்கள் ஒரு மனிதனுடைய அமைதியான வாழ்வு, பழையகால சிலவில்லா அரசாங்க நிர்மாண திட்டம் இவைபோன்ற பலவகை கனிகளை நாம் புசித்திருக்கிறோம். ஐரோப்பியரும் அமெரிக்கரும் மிக்க பிடிவாதமாய் பெருமை வாழ்வில் தலையிட்டவர்கள் கூட இந்து மதத்தின் வாழ்க்கையின் நோக்கத்தை யறிந்து தங்கள் வேகத்தை நிறுத்தி இதன் பெருமைகளை ஆலோசித்து வருகின்றார்களல்லவா ?

அப்படிப்பட்ட மனோபாவம் வாய்ந்த நாட்டின் ஒற்றுமையைப் பற்றி இத்தேயத்தின் புராதன உதாரணங்களை திருப்பிக் காட்டுவதன்றி அன்னியதேச சரித்திரங்களின் பிரதிமானம் மிகையாகவே நாம் கருதவேண்டும்.

இப்பொழுது இந்நாட்டிலிருக்கும் சாதி வேற்றுமை, மதப் பிளவுகள், சமயப்பிளவுகள், கக்ஷிபேதங்கள் இவைகளெல்லாமமைத்த கடவுளும், அவர் அதிகாரம் பெற்ற பெரியோரும் ஆக்கும் சக்தியை நிறைவேற்றுவதற்காகத்தான். எப்படி ஓர் குடும்பத்தில் ஓர் தகப்பனுக்கு பல பிள்ளைகளும், அப்பிள்ளைகளுக்கு கீழ்பிள்ளைகளும் காலக்கிரமத்தில் அதிகரித்து விடுவதால், அவர்களை காப்பாற்றுவது தலைமையானவனுக்கு தொல்லபமாய் முடிந்து குடும்பங் குடும்பமாக பிரித்து விடுகின்றாரோ: அவ்வாறே இந்து மதத்தின் தர்மத்தை ஆற்றுவதற்கு சாதி பிரிவுகள் ஏற்படுத்தியிருக்கின்றார்கள். இதை வெள்ளைக்காரர் கடமை என்பதின் கீழ் பாகுபடுத்தியிருக்கின்றார்கள். சமூகம்உற்சாகமும் தர்மத்தை நிறைவேற்ற புதிய முறைகளை கண்டுபிடிக்கவும் கற்பனா சக்தியை வளர்க்கவும், நாகரீகம் மனோசக்திகளை வளர்க்கவும் ஓர் பிரிவினர் முயற்சிக்கும்போது மற்றொரு வகுப்பார் அதற்கு எதிராக குறுக்கிடும்போது கக்ஷிபேதங்கள் உண்டாகின்றன. இவைகளெல்லாம் நிர்மாணசக்திக்குரிய பிரமாணங்களாகும்.

இவ்வாறு பெருமை பெற்றதும் தெய்வீக பிரஜைகளால் ஏற்படுத்திய நிர்மாண திட்டமானது என்றும் அழியாத நோக்கங்கொண்டதென வேதங்கூறும்போது, அது தற்போழ்து அடைந்துவரும் சிதறுண்ட நிலைமையும், பரிதாபமும்; வறுமையுமான ஸ்திதியும் ஏற்பட்டதற்கு ஏதோ சில காரணங்களிருக்க வேண்டும். அவைகள் நிர்மாணபடியிலிருந்த மேலோர்களாலேயே உடைத்தெரிக்கப்பட்டதேயன்றி கீழோர்கள் அதற்கு சாவுகுழி தோண்டவில்லை. அந்நிர்மாண திட்டத்தை ஏற்படுத்திய மகரிஷிகள் சென்ற பின்னர் நாளடைவில் வந்து கொண்டிருந்த மேலோர்கள் நிர்மாண திட்டத்தை மாத்திரம் ஒழுகிவந்தார்களேயன்றி அந்த திட்டத்திலுள்ள ஒவ்வொரு உயிரும் முன்னேற்றமடையவும் காலக்கிரமத்திலோ அல்லது வேறு ஜென்மங்களிலோ தங்களுக்குரிய மனித ஏகோபசமத்துவ ஆத்மபரிணாம வளர்ச்சியை பெறவும் முடியாமல் தடைப்படுத்தி, அவர்கள் தேகவளர்ச்சிக்கும் மனோவளர்ச்சிக்கும் மூட்டுக்கட்டை போட்டுவிட்டார்கள். வாய்க்கால் வழியாய் ஓடிக்கொண்டிருக்கும் ஜலத்தை யடைத்தவுடனே ஜலம் எதிர்த்து கரைகளை யுடைத்துவிடுமல்லவா? இதுபோலவே காலத்தறுவாயில் கீழ்மக்களின் முன்னேற்றத்திற்கு பல அசௌகரியங்கள் நேர்ந்தன. பல ஆயிரக்கணக்கான வருஷங்களாக பெரியோர் இட்ட திட்டத்தின்படியே நடந்துவரும் ஜனங்கமானது, சாஸ்திரமும், வேத ஆராய்ச்சியும் பரிசயம் செய்யவேண்டிய காரணம் ஏற்பட அவசியமாக தோன்றியது. இஃது இவ்வாறு கலகப்பட்டுக்கொண்டிருக்கையில் கீழ்மக்களின் ஆத்ம பிரயோகமானது ஒன்றுபட்டு மேல்சமுத்திரத்தை தாண்டி ஆங்கிலத்தாரின் கருணைக்கு சரண்புகுந்தது. ஆங்கில அரசானது இந்தியாவில்புகுந்த பல நாட்களுக்குபின்னரே சமூகவளர்ச்சிக்கு விரோதமாகிய முட்டுக்கட்டைகள் எடுக்கப்பட்டன. ஆனால் அது பழையஉருவை மறுபடியும் அடையாமல் மேல்நாட்டு நாகரீக போக்கை யடையவேண்டுமென நினைத்துவிட்டது. ஆங்கில ஆக்ஷியும் சமயம்பார்த்து அதை ஆகக்ஷிரித்து தன்வயப்படுத்தி விட்டது. கூடியவரையில் இந்துமதத்தின் பேரியோர்எல்லாம் அதன் பெருமையையும் சிநேகத்தையும் பெற அதை யணுகி விட்டனர். கீழ்நிலைமையிலுள்ள மற்றவரும் ததேக வளர்ச்சியின் பொருட்டு அதைத்தழுவினர்.

ஆனால் ஆங்கிய ஆக்ஷிமுறையானது மேல்நாட்டுநாகரீகங்களில் மூழ்கியிருந்ததால் தன்னுருவாக இந்தியரை நாளுக்கு நாள் திருப்பிக்கொண்டு வந்துவிட்டது. பெரும்பாலும் இந்துக்களின்

குருகுலமாய்தோன்றின மேலோர்களெல்லாம் அதற்கு அடிமையாய் போய்விட்டார்கள். காலக்கிரமத்தில் இந்திய அறிவாளிகளெல்லாம் மேல்நாட்டு நாகரீகத்திற்கும் சிநேகத்திற்கும் பாத்ரமானார்கள் ஆயினும் இந்தியமாது தன் பழைய நாகரீக ஒழுக்கங்களை அடியோடு ஒழித்துவிடவில்லை, சில கீழ்வகுப்பினரிடத்தும் அது குன்றாது பூர்ணித்திருந்தது.

இந்த மேல்நாட்டு முறைகளால் பொருமை, திருப்தியின்மையை உண்டாக்குவதோடு பிறருடைய கஷ்டங்களை அது செவியிலும் போட்டுக்கொள்வதில்லை; மனிதரை உயிரோடு கொல்லுமுறைகள். அங்கு சதா கொள்ளைகளும் கொலைகளும் நடைபெறுகின்றன. அகோரயுத்தங்களும் நிகழ்கின்றன.

இவைகளெல்லாம் கண்ணும் கருத்துமாக கவனித்துக்கொண்டிருந்த மகாத்மா காந்தியடிகள் தமது சகோதரர்கள் அந்த பயங்கரமான நாகரீகத்தின் வாய்படாமல், திரும்ப பண்டை நாகரீகத்தின் உருவையடைய பல பகீரத முயற்சிசெய்தார். அவைகள் உடனே பலிக்காவிட்டாலும் அம்முறைகள் உலக முழுவதும் விரைக்கப்பட்டு பயிராகிவருகின்றன. அதன் உருவம் இப்பொழுது அவலக்ஷணமான தாராகுஞ்சை ஒத்திருந்தாலும் நாளடைவில் ஓர் அழகுபொருந்திய அம்ஸபக்ஷியையொத்து விளங்குமென்பதை உத்தேசித்தால் அம்முறைகள் உலகத்தில் இனிமேல் சிறந்து விளங்கப்போகிறதென்பது தெளிவாய் புலப்படும்.

ஆகையால் சகோதரர்களே நீங்கள் இனிமேல் அனுஷ்டிக்கும் ஒற்றுமையில் மேல்நாட்டு நாகரீகமுறைகளைப் பின்பற்றாமல் இந்து மாதாவின் பாகவதர்களை பின்பற்றி அவர்கள் வார்த்தைக்கு செவிகொடுங்கள் தவிர உங்களுக்குவேண்டிய உண்மைகள் ஒற்றுமைகள்யாவும் ஆங்கில அரசாங்கம் அமைத்துவிட்டுமென்று எண்ணாதீர்கள். அவர்கள் தாங்கள் செய்யக்கூடியவைகளையெல்லாம் சட்டம்செய்து வைத்திருக்கிறார்கள். அதில் அறிவாளிகளுக்கு வேண்டுவன ததும்பிக்கிடக்கின்றன. யார் யார் முயற்சி செய்கின்றனரோ அவர்கள் நன்மை பெறுவார்கள். "கேட்கிறவனுக்கு கொடுக்கப்படும்" "தட்டுங்கள் திறக்கப்படும்" என்பது ஆங்கில பழமொழியன்றோ அதனால் அவர்கள் தூங்குகிறவர்களுக்கு நன்மைசெய்யப்போவதே கிடையாது. பிராமணரல்லாதார் கக்ஷியை எடுத்துக்கொள்ளுங்கள் அவர்கள் இந்து ஜனபிஞானவிர்த்தியிலும் அரசியல்ஞானத்திலும் தாழ்ந்தவர்களா

யிருக்கிறார்கள். அவர்கள் முற்போக்குக்கு ஒரு கக்ஷியிருந்தே தீரவேண்டும். ஆனால் அது பிராம்மணர்களை இழிவுபடுத்தவாவது குறைகூறவாவது முற்படுமானால், அது தவறான நோக்கத்தோடு எழுந்திருப்பதென நோக்கப்படும். பிராம்மணர்கள் இக்காலத்தில் சாதாரண மனிதர்களாய் பாவிக்கப்பட்டாலும், ஒரு காலத்தில் ராஜாக்கள்முதல் மற்றவர்களும் அவர்கள் பாதபடியில் தண்டம் சமர்ப்பித்தவர்களேயாகும். இடைகாலத்தில் ஏற்பட்ட கலவரமான காலத்தறுவாயில் அவர்கள் மௌடீக பிரஜைகளின் வாயில்களுக்குபோய் யாசித்து அதனால் அடைந்த கஷ்டங்கள் பலவாயிருக்கவேண்டும். இவைகள் என்னைப்போல் ஜனங்களின் உதவியை எதிர்பார்த்து பட்டடைந்த கஷ்டவாளிகளுக்குதான் இவ்விதஞானம் உதயமாகும். அறிவும் ஆற்றலுமிகுந்த பிராம்மணர்கள் சாதாரண மனிதர்களின் உறைவிடங்களில்சென்று யாசித்தால் அவர்கள் ஓர் மனிதனுடைய கஷ்டநிஷ்டூரங்களையறிந்து அவர்களின் கோரிக்கைகளை பூர்த்திசெய்ய முடியுமா? ஆகையால் ஆண்டவன் அவர்களுக்கு செவிகொடுத்து இப்பொழுது ஆக்ஷிமுறையில் அவர்களுக்கு பங்குகொடுத்திருக்கிறார். இதனால் பிராம்மணரல்லாதார் அவர்களிடம் சிநேகம் பூண்டு தங்களின் முன்னேற்றத்திற்காகவும் உதவிக்காகவும் வேண்டுவன புரியுமாறு அன்போடு கேட்கவேண்டும். அவர்களுமே அப்படியேசெய்யலாம் அவர்கள் அப்படி செய்யத்தவறினாலும் திராசுகோல் மறுபக்கம்சாய்வது இயற்கையல்லவா. இதனால் எந்தக்கக்ஷியினரும் சமூகக்கட்டுப்பாட்டில் தங்கள் சுயாபிமான காடியை விட்டுவிட இடமிராது. தனிக்கக்ஷியென்றும் ஓர் கக்ஷியுள்ளது. அதினால் பிரகிருதிக்கு எவ்விதநன்மையும் கிடையாது. சுயராஜ்யகக்ஷி அது இந்தியா சுயஆக்ஷிபெறுமாறு முயற்சிக்கின்றது. ஆனால் கிராமங்களில் மிகுந்த கீழ் நிலைமையிலும் தரித்திரத்திலும் ஆழ்ந்த ஏழைமக்களின் மனோநிலைமைக்கு ஒத்தவாறு நடந்துகொள்ளவேண்டும். அவர்களின் கஷ்டங்கள் அளவு கடந்தவைகளாயிருக்கின்றன. அவர்களில் பெருந்தொகையினருக்கு கல்வி பயிர்ச்சியாவது தேசாபிமானமாவது ஒரு சிறிதும் கிடையாது. ஆங்கில ஆக்ஷிமுறையின் மகிமை பட்டணவாசங்களில் சமத்துவநிலைமை யளித்தபோதிலும் கிராமங்களில் இங்கிலீஷ் ஆக்ஷிமுறையே சிறிதும் காணப்படவில்லை. இதற்கு காரணம் ஜனங்களின் மௌடீகபுத்தியாகும். ஆகையால் சுயராஜ்யக்கக்ஷியார் அவசரப்படாமல் தாழ்ந்த ஜனங்களின் வசதிகளை கோரியும் அவர்கள் புத்திகோசரத்தின் நன்மைகளிலும் பெருங்காலத்தை செலவிடவேண்டும்.

காந்திக்கூஷி இது பல தேசசரித்திர சாஸ்த்ரவிற்பன்னர். நிரக்கற்று மேலானநிலைமையை யுற்றவர்கள். மேல்நாட்டு நாகரீகத்திலும் ஈடுபட்டவர்கள் கண்டுகொண்ட உண்மை தத்துவம் இவர்களிடை வெள்ளியங்கிரிபோல் பிரகாசிக்கும். ஆனால் மேல்நாட்டார் உலகத்தை கொள்ளைகொண்டுவாழும் முறைகளும்; அதினால் அவர்களுக்குள் ஏற்படும்பொறாமையும், உயிர்கள் சேதமும், சலியாதஉழைப்பும், அங்குவாழ்வதற்கு ஏற்பட்டிருக்கிற கொடுமையான சட்டங்களும், யுத்தகோர சம்பவங்களும் அவைகளுக்கு காரணங்கள் தெரிந்தவர்களுக்கல்லாது மற்றவர்கள் காந்தியின்கூற்றை பரிகசிக்காது வேறென்ன செய்யமுடியும். இனி ஒற்றுமையின் தத்துவத்தை வரையறுத்து கூறுவதற்கு இடம் போதாததாலும் அதன்முடிவை இங்கு கூறிவிடவேண்டியதே.

மதக்கக்ஷிகளெல்லாம் மூர்க்கங்கொள்ளாமல் சாவதானமாக சமரஸக் கொள்கையில் தங்கள் பிணக்கை தீர்த்துக்கொள்ள விசாலமானகாலம் நீடித்துக்கொண்டே போகின்றது. ஜாதிப் பிரிவுகள் இப்பொழுது அதிகம் கிடையாதென்றாலும், ஏதாவது தலையெடுத்தாலும் அது தன்முறையில் தன் உரிமையைப் பெற வேண்டுமே யொழிய தேசப் பொது நல காரியங்கள் பெரியோர்களாலாற்றப்படுவதற்கு தொந்திரவுகொடுக்காமல் ஒன்றுபட்டு வாழவேண்டாமா?

கக்ஷிபிரிவுகள் சுயநலத்தையோ? ஓர் சிறு குறுகிய நோக்கத்தையுடைய கூட்டத்தார் தந்நலத்தை கோரிசெய்யும் முயற்சிகள் தேசியமுயற்சியில் புகுந்துவிடாமல் பொது விஷயங்களில் அனைவரும்சேர்ந்து ஒன்றுபட்டால் சுகம்ஏற்படுமல்லவா? இல்லாவிட்டால் பொறாமையுடையவன் பாய்ச்சிலையுருட்டின கதையைப்போல் முடியும்.

ஆகையால் சகோதரர்களே ஒற்றுமைபடுங்கள். பொதுப் பான்மைக்காக உழைக்கிறவர்களுக்கு உதவிபுரியுங்கள் பத்திரிகைகளை வாங்கி வாசியுங்கள், அவற்றை கல்விவாசனையில்லாதவர்களுக்கு வாசிக்கவும் சொல்லவும் தெரிந்தவர்களைக் கொண்டு அவர்களுக்கு நற்புத்தி கற்பியுங்கள் இதுவே உங்கள்கதிக்கு பலனளிக்குமோக்ஷம் "எத்தால்வாழலாம் ஒத்தால்வாழலாம்".

ஒன்றுபட்டாலுண்டு வாழ்வே நம்மில் ஒற்றுமை
நீங்கினால் அனைவர்க்கும் தாழ்வே. பாரதி.

வையத்து வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும். குறள்.

தங்கமணி வாசகம்.

சமரசம்:—மனித சரீரம்பெற்று எல்லாஜீவர்களையும் அடக்கியாளும் திறமை வாய்ந்தவர்களே; "உன்னைப்போல் உன் பிறனையும் நேசி" யென்பது ஓர் குருநாதரின் 'பொய்யாமொழியன்றோ! சாக்ஷாத் கடவுளின் அருள் ஒவ்வொரு உயிரிலும் சேர்ந்திருக்கின்றனவல்லவா? பிரகலாத புராணத்தில் ஆண்டவன் தூணிலும் துரும்பிலுமிருப்பதாக கூறப்படுகின்றதே! அப்படியிருக்க உங்களை சுற்றிக்கொண்டும் உங்களை தஞ்சமென்று அடைந்தும் உங்கள் நன்மைகளில் ஈடுபட்டு உழைக்கும் ஏழைகள் நிர்வாணமாகவும், தீராபசியோடும் குந்த குடிசையுமில்லாமல் தவிக்க நீங்கள் விதம் விதமாகவும் ஜதை ஜதையாகவும் ஆடைகளை பெட்டியில் சேகரம்செய்துகொண்டு உடுத்தி அலங்கரிப்பதினாலும், உங்கள் இல்லங்களை வானளாவிகட்டிக்கொண்டு சுகிப்பதாலும், பலகார பக்ஷணங்களோடும் அறுசுவையோடும் உணவு அடிக்கடி உட்கொண்டு வாந்தியெடுப்பதனால் என்ன பயன். இதோடு நில்லாமல் அவர்கள் ஒற்றுழைத்த மேன்மையினாலடைந்த பொருள்களை கண்மூடித்தனமாக காசிக்கும் ராமேஸ்வரத்துக்கும் திருப்பதிக்கும் வாரிக்கொட்டுவதுமல்லாமல் முகமறியாத மனிதர்களுக்கும் விஷயமறியாமல் மந்திரவாதிகளுக்கும தந்திரவாதிகளுக்கும் கொடுத்தழிப்பதுமல்லாமல், நன்மைசெய்வதாக கூறி பொருள்பறிக்கும் உத்தியோகவர்கத்தவருக்கு ரகஸ்யமாக கொடுக்கிறீர்களே! உங்களை அண்டின அடியார் கூட்டமெல்லாம் எந்நிலைமையிலிருக்கிறார்களென்று கவனித்தீர்களா? பெற்றதாய் பசித்திருக்க பிராம்மண போஜனம் உண்ணும் பாதகர்களே? எதுவரைக்கும் உங்கள் செயல் நீடிக்கும் எதுவரைக்கும் உங்கள் செயலை மாற்றாமல் இவ்வாறு மனிதவதைசெய்வீர்கள். மனந்திரும்புங்கள் நீங்கள் பலகார பக்ஷணங்களோடு புசித்தாலும், ஏழைகளுக்கு கேழ்வரகு கூழாவது சரிவர தினவாரி கொடுத்துதவுங்கள். நீங்கள் பட்டாடையுடுத்தினாலும் முரட்டு கத்தர் துணியாவதுகொடுங்கள் உன்னத மாளிகையில் வசித்தாலும் அவர்களுக்கு குடிசலாவது கட்டிக்கொடுங்கள். இப்படி செய்யாவிட்டால் தன்னைப்போல் பிறனையும் நேசிப்பது எப்படி! இப்படி உங்கள் கொள்கைகளை மாற்றிக்கொள்ளாமல்போனால் கக்ஷிபேதங்கள் எழும் அலைவகளினால் உங்களுக்கு கஷ்டமேவந்து விளையும். இவ்வித முயற்சியெல்லாம் மனிதர் உண்டாக்குவதில்லை; ஆண்டவனே கால தர்மத்தை நிலைநாட்ட நியமிப்பார். ஆகையினால் சீக்கிரம் மனந்திரும்பி சமரஸ கொள்கைகளை கைப்பிடியுங்கள்.

எதிர்கால தீர்க்க தரிசனம்:— வெகுகாலமாக இலங்கை, பினாங், சிங்கப்பூர் முதலிய இடங்களுக்கு இந்தியாவிலிருந்து போனவர்களின் தொகையைக்காட்டிலும், இப்பொழுது திரள் திரளாக ஏழைமக்கள் செல்கிறார்கள். அவர்கள் அவ்விடம் சென்றால் புத்திமானான தலைவனால் சரிவர வேலைகள்கொடுத்து தினவாரியாக கூலியும் கொடுக்கப்படுகின்றன. அங்கே எல்லாருக்கும் சமரஸமாக வீடுகளும், உடைகளும், உணவுகளும் அளிக்கப்படுகின்றன. அங்கு தீண்டாமையே கிடையாது. பள்ளிக்கூடங்களும், வைத்தியசாலைகளும் நியமிக்கப்பட்டு தீண்டாதாருள்பட சமரஸமாகவே படித்துவருகிறார்கள். நீங்கள் ஏழைகளையும் தீண்டாதவர்களையும் முன்னேற்ற முட்டுக்கட்டைபோட்டபோதிலும் வெளிநாடுகளில்சென்று படித்து பணத்தை சம்பாதித்துக்கொண்டு இங்ஙனம் வந்தால் அக்கால் உங்களை அவர்கள் மதிப்பார்களா? அவ்வாறு முடியாவண்ணம் உங்கள் முட்டுக்கட்டைகளை விலக்கி ஏழைகள் வெளிநாடுபோகாமல் தடுத்து அவர்களை காப்பாற்றுங்கள். அவர்களின் க்ஷேமமே உங்களின் செல்வம் என்பதை மறந்துபோகாதீர்கள். ஆகையால் இனிவரும் எதிர்காலத்தில் ஏழைகளின் படிப்பு, செல்வம், முதலிய விஷயங்களில் முட்டுக்கட்டை இதுகாறும் போட்டதுபோல் இனி போடமுடியாதென்பது நிச்சயம். அப்படியானால் எதிர்காலம் நல்லகாலந்தான்.

போதுப்பான்மை:— உபகாரம், தர்மம் முதலியவைகளைக் காட்டிலும் பொதுப்பான்மை விசேஷமானது லண்டன்மா நகரத்திலுள்ள ஓர் வைத்தியசாலைக்கு ஓர் சிறு பெண்மணி அடியிற்கண்டவாறு நிருபம்தீட்டியதாக அந் நகரத்திலிருந்து வரும் டைம்ஸ் பத்திரிகை வெளியிட்டிருக்கிறது. “சிப்பாய்களின் காயங்களில் வேறுஒருவரின் சரீரத்தினின்று எடுக்கப்பட்ட உயிருள்ளதோலை ஒட்டினால் காயமானது சீக்கிரமாகவும் நன்றாகவும் ஆறுமென்று கேள்விப்படுகிறேன். அது உண்மையா என்று எனக்கு தயவுசெய்து சொல்லவேணும். போதுமானவரையில் உயிருள்ள சருமம் அகப்படாமையால் யுத்த வீரர்களுடைய காயங்கள் நன்றாக ஆறவில்லையென்று கேள்விப்படுகிறேன். அது வாஸ்தவமானால் என்னுடைய சரீரத்தினின்று போதுமான சருமத்தை எடுத்து யுத்தவீரர்களின் காயத்துக்கு கட்டுவதற்கு உபயோகமாகும் பொருட்டு எப்போது என்னை வரும்படி சொன்னாலும் வருவதற்கு சித்தமாய் காத்துக்கொண்டிருக்கிறேன். என் சரீரத்திலிருந்து எவ்வளவு சருமம் எடுத்துக்கொள்ள சாத்தியமோ அவ்வளவும்கொடுக்க காத்திருக்கிறேன். நான் ஏதோ உற்சாகமுள்ள நேரத்தில் யோசனையின்றி இதைச் சொல்லு

கிறேனென்று எண்ணவேண்டாம். நான் இந்த நகரத்தை யடுத்த கிராமங்களுக்கு ஜீவனார்த்தமாக போகவேண்டியிருப்ப தால், சிப்பாய்களுக்கு வேறுவிதத்தில் உதவிசெய்ய எனக்கு சாத்தியப்படவில்லை. வேறு வைத்தியசாலையும் எனக்குத் தெரி யாதாகையால் தங்களுக்கு இதை எழுதலானேன். நான் செய் யக்கூடிய மேற்கண்ட உதவி தங்கள் வைத்தியசாலையில் தேவை யில்லையென்றால் தயவுசெய்து வேறு எவ்விடம்சென்றால் பயன் படும் தெரிவிக்கக்கோருகிறேன்'' பாருங்கள் ஆங்கில பெண்மணி தன்னாட்டுக்காக உயிரையும்கொடுக்க சித்தமாயிருக்கிறாள்.

காலதர்மம்:—விழுப்புரம் ஸ்ரீமான் கோவிந்தராஜலுநாயுடு அவர்கள் ரயில்வே கண்டிராக்டர். பொதுஜனஉபகாரி, வருஷக் கணக்காக தினந்தோறும் ஆயிரக்கணக்கான ஏழைமக்களுக்கு கஞ்சிவார்க்கிறார். அகஸ்மாத்தாய் கஷ்டப்பட்டு வருகிறவர் களுக்கு அந்தஸ்துக்குதக்கபடி, சாப்பாடும், ரயில்வே சார்ஜ் இல் லாவிட்டால் டிக்கெட்டும் கொடுத்தனுப்புகிறார். தாழ்ந்த ஜாதி யாரை படிப்பிக்க பொருளுதவிசெய்கிறார். தேசபக்தருக்கு வலதுகை போன்றவர். இவரிடம் வருபவர்களை ஐந்து நிமிஷ மாவது நிற்கவைப்பதேகிடையாது. தன் வேலையைவிட்டு வந்தவர்களுக்கு உபசாரம் செய்தனுப்புவார். இவர் ஓர் பெரிய பணக்காரர் அல்ல. இந்த ஊரிலிருப்பவர்களைவிட பணத்தில் தாழ்ந்தவரே. அவர் வருமானத்தில் 4ல் 1பங்கு தர்மத்திற்கு செலவிடுவதாக தெரிகின்றது. ஜனசமூகத்தில் தங்கள் வேலை களை செய்துக்கொண்டிருப்பவர்களுக்கு நேரிடும் தவறுதல்களி லிருந்து சமயத்தில் கைதூக்கிவிடும் குணம் மேல்நாட்டாருடை யதே. இவரும் அப்படிப்பட்டவரே. சில கண்மூடிகள் சாப் பாடுதவிற வேறுஒன்றும் உதவி செய்யமுடியாதென்று காவி வேஷ்டிகட்டின திருடர்களுக்கெல்லாம் தினம் 100கணக்கான பேர்களுக்கு அளிக்கிறார்கள் இவர்கள் அறியாமைக்கு இறங்கு கிறோம்.

மகாத்மாவும் பிரஜைகளும்:— பல கிராமாந்தரத்திலும் ஜனங்களும் டவுன்களில் பத்திரிகை வாசிக்காத நவீன போக் குள்ளவர்களும் மகாத்மா காந்தியடிகள்பேரில் பழியை சுமற்று கிறார்கள். சிலர் 'காந்தி ராஜ்யத்தைபிடிக்க வந்தாரே அவரால் முடியாமல் போய்விட்டதே? என்ன ஒரு விசேஷமும் காணோ மே! என்கிறார்கள். சிலர் காந்தியினால்தான் பெருத்தகஷ்டம் வந்து நேர்ந்தது. தபால்முத்திரைகள் உயர்த்தப்பட்டது. ரயில்வேகட்டணமும் அப்படியேதான். இன்னும் பல வரிகள் அதிகமாகவும் கொடுமையாகவும் விதிக்கப்படுகின்றன. மதுபா

னம் நின்றபாடில்லை இவைபோன்ற பல கேள்விகளை, கேட்பது மன்னியில் அவரை தூற்றுவதற்கு உள்படுகிறார்கள். அவரால் என்ன நன்மை உண்டானது என்கிறார்கள். அந்தோ! இவர்களின் மனோசக்தியை என்னென்று கூறுவது. மேற்புரத்தை கவனிக்கும் மாந்தர்கள்.

பதில் தொடரும்.

பள்ளிக்கூட உபாத்தியாயர்கள் கவனிக்கவேண்டிய விஷயங்கள். (வேவுகாரர்கள்)

சுமார் ஒன்பது வருஷங்களுக்கு முன் இங்கிலாந்தில் ஸர் ராபர்ட் பேடன் பவல் என்ற ஒரு புத்திமானால் வாலிபர்களுக்கு தேசாபிமானமும், ராஜபக்தியும், பரோபகார சிந்தையும், நன்னடத்தையும் எளிதில் உண்டாகும் பொருட்டு ஒரு புதிய ஏற்பாடு செய்யப்பட்டது. "ஸ்கௌட்" என்ற ஆங்கில பதத்திற்கு வேவுகாரன் என்று பொருள் ஒரு சைன்யத்திலிருந்து வெகு சாமர்த்தியசாலியாயும் தீரனாயும் உள்ள ஒருவீரனை முன் வேவு அனுப்பி எதிரிகளின் நிலவரையையும், பலா பலன்களையும் உள் ரகசியங்களையும் அறிந்து வந்து தளகர்த்தரிடம் தெரிவிக்கும்படி அனுப்புவதுண்டு. அவ்வேவுகாரனுக்கு ஆங்கிலத்தில் 'ஸ்கௌட்" என்று பெயர். எப்படி ஒரு சைன்யமானது தைரியமாய் முன் சென்று வெற்றி பெறுவதற்கு வேவுகாரன் இன்றியமையாதவனோ, அம்மாதிரியே பிரிடிஷ் ராஜ்யம் உலகெங்கும் பாவுதற்கு காரணஸ்தராயிருந்தவர்கள் ஆங்கிலேயர்களுள் தைரியமும் மன உறுதியும், விடாமுயற்சியும் தேசாபிமானமும் உள்ள சிலரேயாம். அத்தகையார் ஒருதேசத்திலுள்ளவரையில் அத்தேசம்ஓங்கும் எத்தேசத்தில் அன்னவர் கிடையாதோ அத்தேசம் சீர்குலையும் நாள் நெருங்கிவிட்டதென்னலாம். ஆகையால் பால்ய பருவமுதற்கொண்டே சிறுவர்களிடத்து மேற்கூறிய குணங்களை வளரச் செய்வது பெரியோர் கடமை. ஸர்பேடன் பவல் இக்காரணம் கொண்டே வாலிபர்களுடைய சங்கம் ஒன்று ஏற்படுத்தி அதின் அங்கத்தினருக்கு ஸ்கௌட் என்று நாமகரணம் செய்தார். தேசோபகார பரோபகாரங்களுக்கு எப்போதும் ஆயத்தமாயிருக்கும் வேவுகாரன் என்று பொருள் படுவதற்காக அப்பெயர் உபயோகிக்கப்பட்டது.

பெற்றோர்களால் எழுத்துமூலம் கொடுக்கப்பட்ட உத்தரவுடன் ஒரு வாலிபன் தன் வயசுள்ள இதர வாலிபர்களுடைய ஜதையைச் சேரவேண்டும். அந்த ஜதைக்கு "பட்ரோல்" என்று பெயர். அதன் தலைவனுடைய உத்தரவைக் கீழ்ப்படிந்து மற்றவர் நடக்கவேண்டும். அவனுக்கு அடுத்தபடி இரண்டாமவன்

பல ஜதைகள் அல்லது 'பட்ரோல்'கள் சேர்ந்து ஒரு சேனை அல்லது துருப்பு ஆகும். ஒரு துருப்புக்குத் தலைவர் 'ஸ்கௌட் மாஸ்டர்' ஒரு பையன் 'ஸ்கௌட்' ஆவதற்குமுன் 'ஸ்கௌட்' விதிகளையும் சம்ஞைகளையும், வந்தனங்களையும் தெரிந்துகொண்டும் யூனியன் ஜாக் என்ற இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, ஐயர்லாந்து கொடியை பறக்கவிடும் விதத்தையும் தெரிந்துகொண்டும் கயிற்றை ஆறுவிதமாக முடிக்கும் விதங்களையும் அறியவேண்டும். இவைகளை அறிந்தவன் ஸ்கௌட் ஆகவேண்டும் என்ற ஆவலுள்ளவனாகவிருந்தால் முதன் முதல் ஒரு மாதகாலம் வரையாவது 'டெண்டர்புட்' என்ற பெயருடைய வகுப்பில் சேரவேண்டும். அவன் 2-ஆவது வகுப்பு ஆவதற்குமுன் (1) அபாயத்தில் 'முதலுதவி' 'காயம் கட்டுதல்' இரண்டும் தெரிந்துகொள்ளவேண்டும் (2) அக்ஷரங்களுக்குச் சரியான சம்ஞைகள் தெரியவேண்டும். (3) 24 சிறு சாமான்களை ஒரு நிமிஷநேரம் பார்த்து உடனே அவைகளில் 16 சாமான்களாவது இன்னவை என்று ஞாபகத்துடன் சொல்லவேண்டும். அதாவது குறிப்பாய்ப் பார்த்தல் என்ற சக்தியைக் காட்டவேண்டும் (4) 'ஸ்கௌட்' நடையில் 12 நிமிஷத்தில் ஒரு மைல் தூரம் செல்லவேண்டும் அதாவது 20 அடி ஓடலுமாக மாறி மாறி நடப்பதுதான் ஸ்கௌட் நடை (5) இரண்டு தீக்குச்சிக்கு மேலுபயோகியாமல் வெளியிடத்தில் நெருப்புண்டாக்குவது (6) வெகு சொற்பமான பாத்திரங்களை வைத்துக்கொண்டு சமையல் செய்தல் (7) தபால் ஸேவிங்ஸ் பாங்கியில் 6 அணாவாவது போட்டுவைக்கவேண்டும். (8) 16 திக்குகள் இத்திக்குகளை திசைகாட்டும் கருவியில் காட்டவேண்டும். இவைகளை தெரிந்துகொண்ட ஒரு டெண்டர்புட் என்றவன் அடியில் கண்டபடி வாக்குத்தத்தம் செய்யவேண்டும். அதாவது,

"கடவுள் விஷயமாயும் அரசன் விஷயமாயும் எனக்கு ஏற்பட்டுள்ள கடமையைச் செய்யவும்,

எக்காலத்தும் இதரர்களுக்கு உதவி செய்யவும்,

ஸ்கௌட் விதிப்படி நடக்கவும் என்னால் கூடியவரை முயலுகிறேன் என்று என்னுடைய கௌரவத்தின் ஆணையின் பேரால் வாக்களிக்கின்றேன் என்று வாக்குதானம் செய்யவேண்டும். அப்படிச் செய்தால் அவன் 2-வது வகுப்பு ஸ்கௌட் ஆகிறான். இவன்.

(1) 56 கஜம் தூரம் நீந்தவேண்டும்.

(2) ஸேவிங்ஸ் பாங்கில் 12 அணாவாவது வைத்திருக்கவேண்டும்.

(3) நிமிஷத்துக்குள் 16 வார்த்தையாக ஸம்ஞையில் பேச வேண்டும்,

(4) தனியாகவாவது அல்லது மற்றொரு ஸ்கௌட்டுடனாவது 7 மைலுக்கு அப்பாலுள்ள ஓரிடத்துக்கு நடந்தாவது அல்லது படகிலாவது போய் அப்படியே திரும்பிவரவேண்டும். வந்த பிறகு, போய் வந்த விவரத்தை சுருக்கமாக எழுதவேண்டும். கூடுமானால் போய்வர இரண்டுநாள் செலவழிக்க வேண்டும்.

தொடரும்.

ஆத்மசக்தி.

(23-ம் பக்கத் தொடர்ச்சி.)

மாந்திரீகன் கவனிக்கவேண்டியதும் முதல் அனுஷ்டிக்க வேண்டியதுமான விதிகள்.

1. முதலாவது சுகாதாரவிதி :— எப்பொழுதும் சுத்தமாயிருக்கவேண்டும். சூரியோதயத்திற்கு முன்னரே குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானம்செய்யவேண்டும் உடனே ஸ்வாமியை மனதில் தியானிக்கவேண்டும்.

2. உடைகளையும் மற்றும் சாமான்களையும் சுத்தமாய் வைத்துக்கொள்ளவேண்டும். அதிக டாம்பீகமான உடை உடுத்தாமலும், அதிக அசுசியான ஆடைகளை தரியாமலும் எப்பொழுதும் வெள்ளைவஸ்திரமே உடுக்க பழகிக்கொள்ளவேண்டும்.

3. சரீரத்தில் எவ்வித நோய் பிணியும் வர இடங்கொடுக்கலாகாது, மிதமானபோஜனத்தை உட்கொள்ளவேண்டும். பெருந்தீனிகளுக்கு ஒருக்காலும் மாந்ரீகம் பலிக்காது.

4. சரீரத்தில் பலம் குறையும்படியான விஷயங்களில் மனதை அதிகமாய்ச் செலுத்தப்படாது. சரீரபலமில்லாவிட்டால் மானஸபலம் சித்திக்காது.

5. கோபம், பயம், வெட்கம், கோழைத்தனம், அடிமைத்தனம் (அதாவது பிறர்பொருளாலாவது உதவியாலாவது ஜீவிப்பது) சோம்பல், சதாமனக்கவலை முதலிய குணங்களை நீக்கிவிடவேண்டும் இவைகளை நீக்கினவன் தான் மாந்திரீக புருஷனுக்கு அருகன்.

6. பிறர்பொருளை இச்சித்தல், பேராசை, ஆத்திரம், பொறுமையின்மை இவைகளை விலக்கவேண்டும்.

7. சதா சாந்தமும் குளிர்ந்தமுகத்தோடுமிருக்க பழகுவதோடு, அன்பும் அவாவும்நிறைந்த வார்த்தைகளால் விடையளி, சுடுமுகத்தை கனவிலும் காட்டலாகாது.

8. பிரதிதினமும் கொஞ்சம் கொஞ்சமாவது சாஸ்திர ஆராய்ச்சியும் பத்திரிகைவாசித்தலும் நல்லது.

9. ஜீவனோபாயத்துக்கு ஏதாவது உத்தியோகமாவது கைத்தொழிலாவது இருக்கவேண்டும். அடிமைத்தனமான தொழிலிருந்தால் மாந்ரீகனுக்கு சக்தி அதிகரிக்க இடையூறுஉண்டாகும்.

10. உண்மையே பேசவேண்டும், பேசபழகவேண்டும், பொய் சொல்லுகிறவன் ஒருக்காலும் பூர்ண மாந்ரீகசக்தியை யடைய முடியாது.

11. மாந்திரீகசக்தியை மௌடீகமான ஏழைகளின், விவேகமில்லாத முரட்டுமனிதர்கள், பிச்சைக்காரர்கள் இவர்களின்பேரில் திடீரென உபயோகப்படுத்தப்படாது. அவர்களால் ஏதாவது இடையூறுநேரிட்டாலும் எவ்வளவுதூரம் பொறுக்க சாத்தியமோ அவ்வளவும் பொறுக்கலாம்.

பல ஜனவிரோதி, பொதுநன்மைக்கு விரோதமாய் நடக்கிறவன், ஏழைகளுக்கு விரோதியாய் நடக்கிறவன், அதிக போக்கிரித்தனமும், கொடுமையானவர்கள்மீது பிரயோகிக்கலாம்.

12. தன் சொந்த பாதுகாப்புவிஷயத்தில் தவிர மற்றசமயத்தில் தனக்கு கெடுதிசெய்கிறவர்கள்மேல் மாந்திரீகசக்திகை உபயோகப்படுத்தினால் பாவம்சம்பவிக்கும் பெரும்பாலும் பொதுஜன நன்மைக்கு உபயோகப்படுத்தினால் மாந்திரீகசக்தி அதிகரிக்கும், அற்பவிஷயங்களுக்கு உபயோகப்படுத்துவது பெருமையாகாது.

13. ஓர்மனிதன் கண்தவிர மற்றஇடங்களில் பிரயோகப்படுத்தலாம். அதிலும் சொரிசிரங்கு முதலியநோய்களை உண்டாக்குவது தேகத்தின் அழகை பங்கப்படுத்துவது வியாதியை உண்டுபண்ணுவது வயிற்றில் கோளாறு உண்டுபண்ணுவது முதலிய காரியங்கள் ஆரம்பத்திலேயே சாத்தியமாக முடியும். குடும்ப விஷயங்களை கலைப்பதும் மரம் மிருகங்கள்மேல் உபயோகப்படுத்துவது அருமையான சக்தி வாய்ந்தபிறகு மற்றெல்லா விஷயங்களையும் இலகுவில் செய்யலாம். ஆனால் நன்மைசெய்வதிலேயே அதிகமாய் சக்தியை உபயோகிக்கவேண்டும்.

14. தன் ரகசியம் தன்னுடைய கஷ்டங்கள் தனக்குள்ள சக்தி தன் இல்வாழ்க்கையின் மர்மங்கள், தான் உத்தேசித்து செய்யப்போகும் காரியங்கள் இவைகளை ஒருக்காலும் ஒருவரிடமாவது சொல்லக்கூடாது. அருமையானவர்களிடத்திலும் பெண்களிடத்திலும்கூட சொல்லக்கூடாது. சொன்னால் காரியசித்தியும் பளிதமும்பெறாது

ஆனால் அதிக மாந்ரீக சக்திவாய்ந்தவன் பகிரங்கமாகவே நடப்பான். தான் செய்யப்போகும் காரியங்களை பகிரங்கமாகவே முன்னடியே சொல்லிவிட்டு பிறகு செய்யத்துணிவான். அவனிடத்தில் ரகசியமென்பதே கிடையாது, பிறருடைய துன்பத்திற்காவது இடையூறுக்காவது பயப்படான். அவன் செய்வதெல்லாம் வாய்க்கும் சிங்கமுதல் எந்த ஜீவனையும் இலகுவில் பழக்கிவிடுவான் சண்டையும்செய்வான். இனி இதற்குமுன் மாந்திரீகசக்தி வாய்ந்த புருஷர்களையும் இப்பொழுது உலகத்திலிருக்கும் புருஷர்களையும் பற்றி அடுத்தசஞ்சிகையில் விவரிப்போம். தொடரும்.

கீழே குறிப்பிட்டவைகளை பேரர்ட் மெம்பரும் சட்டசபை மெம்பர்களும் அமுலுக்கு கொண்டுவர பிரயத்தினம் செய்யவேண்டும்.

கிராம நிர்மாணமுறைகள்.

பஞ்சாயத்துவிதிகள் (ஜவாப்தாரியான ஆக்ஷிமுறை).

1. மதங்கள் ஜாதிகளைப்பற்றி தனி வியாசம் அடுத்த சஞ்சிகையில் வரும்.

2. பஞ்சாயத்து ஸ்தாபனங்கள்—5 முதல் 15 அல்லது அந்தந்த ஊரின் செல்வாக்குக்கு ஏற்பட்ட அதிக நபர்களை பஞ்சாயத்தாராக அங்கீகரித்துக்கொள்ளலாம் பஞ்சாயத்து ஸ்தானத்தில் உபாத்தியாயர்கள் நாகரீகமானவர் முதலியவர்களுக்கு ஓட்டுரிமையில்லாவிட்டாலும் கட்டாயம் சேர்த்துக்கொள்ள முயற்சி செய்யவேண்டும். கிராமாந்தரங்களில் 7-வது வகுப்புக்கு மேல்பட்ட படிப்பு உள்ளவர்களுக்குப் பட்டணவாசங்களில் ஸ்கூல் பைனல் பாஸ் செய்தவர்களுக்கு மேற்பட்ட படிப்புள்ளவர்களுக்கும் ஓட் உரிமை வழங்கல் வேண்டும். பஞ்சாயத்தாரில்—படித்தவர்கள், தனிகர்கள், தொழிலாளிகள், ஆதிதிராவிடர்களுமிருக்க வேண்டும் மௌடீகமான வகுப்புகளில் சில நபர்களை அவசியமானால் அதிகமாய் தேர்ந்தெடுத்துக்கொள்ளவேண்டும். கல்வி வாசனையிலாவது, நாகரீகத்திலாவது பிற்போக்குள்ளவர்களையும் சேர்த்துவைத்தால்தான் அவர்களுக்கு நியாய பரிச்சயம் செய்வதற்கு சந்தர்ப்பம் ஏற்படும்.

பஞ்சாயத்தார்கள்:—பாரல்டு பஞ்சாயத்து, ரிவினியூ பஞ்சாயத்து, ஊர் பஞ்சாயத்து ஜாதி பஞ்சாயத்து முதலிய பஞ்சாயத்துகளெல்லாம் கலகமும், வீண்குழப்பங்களும் உண்டாக்கக்கூடிய காரியங்களே ஒழிய இவ்வித வகைவகையான பஞ்சாயத்துகளால் ஒற்றுமையும் நன்மையும் நிலவுதலில்லை. எல்லா விஷயங்களும் கிராம பஞ்சாயத்தார் என்ற அத்தஸ்தின் பரிபாலனமுறை

யிலேயே விட்டுவிடவேண்டும் அப்பொழுது ஜனங்களுடைய க்ஷேமங்களையும் கஷ்டங்களையும் சீர்தூக்கி பார்ப்பதற்கு சந்தர்ப்பம் உண்டாகும் கிராம பஞ்சாயத்தாருக்கு தலைமையாக மணியம் கணக்குகளை சேர்த்துக்கொள்ளவேண்டும். எவ்வளவுக்கு பிரிந்து விஷயங்கள் நடக்கிறதோ அவ்வளவு பொறுப்பில்லாமுறை உண்டாகிவிடும். ஒருவருக்கொருவர் சாக்குசொல்லவேண்டியவர்களாகிவிடுவார்கள்.

குறிப்பு—மௌடீகமானவர்களையும் கீழ்ஜாதியாரையும் தீண்டாதவரையும் ஒன்ருய் சேர்த்துக்கொள்வதினல், அநேக நூற்ருண்டுகளாக நாகரீகத்தில் சிறந்து விளங்கும் பிராமணர்கள் வேளாளர்கள், செட்டிமார்கள் நாயடுமார்களுக்கு அதிக மன வருத்தமும் குழப்பமும் உண்டாகலாம். இது இயற்கை. இப்படி செய்வதினல் தங்கள் நாகரீகததிற்காவது, சாயக்காலுக்காவது பங்கம் சிறிதேனுமுண்டாகாது. இப்பொழுது அவர்களுக்கிருப்பதைவிட பதின்மடங்கு அதிகமாகவே விருத்தியாகும். ஆனல் அவர்கள் உற்சாகமுள்ளவர்களாய் காணப்படவேண்டும். நீங்கள் அவர்களை உங்கள் அண்மையில் சேர்த்துக்கொள்வதால், நீங்கள் அவர்களால் உபசரிக்கப்படுவீர்கள். நாகரீகத்தை போதிக்கும் உபாத்தியாயர் அல்லது குரு என்று அவர்கள் உங்களை ஆசரிப்பார்கள். ஆனல் குறைகளை யடைவதற்கு உங்களில் ஜீவகாருண்யம் இளகினமனது நியாயவாதம், பிறர் நலங்கோரி உழைக்கும் குணம் சத்தியம் முதலிய அருங்குணங்களை அவர்களிடம் காட்டவேண்டும். அவர்கள் தவருன வழிகளில் நடந்தாலும் உங்களின் சுத்தி காணம் அவர்களை வெட்கப்படுத்திவிடும். அதாவது உங்களின் மேலான நடக்கையாலும் குணத்தாலும் அவர்களை யடக்கியாளவேண்டுமேயொழிய பணத்தாலும் முறட்டுதனத்தாலும் அடக்கியாள முயலலாகாது. அப்படி செய்வது பிறகு ஆபத்தாகமுடியும், அவர்கள் முதலில் தெரியாதவர்களும் கபடற்றவர்களுமாய் காணப்பட்டபோதிலும், அவர்களுக்கு நேரிடும் தீமைகள் மனதில் பதியவைத்துகொண்டு சமயம் பார்த்திருப்பார்கள் சமயம் வந்தவுடனே எவ்வளவு மரியாதையாய் பாவித்தார்களோ அவ்வளவு நேர்விரோதிகளாய் அகௌர்வம் செய்ய தலைப்படுவார்கள். ஆகையால் மேலொன்று வாய்மொழியில்லாது நடக்கையில் காண்பிக்கவேண்டும்.

நாகரீகத்திலும் சன்மார்க்கங்களிலும் சிறந்து விளங்கும் மனிதவர்க்கம் சீர்குலைந்துவிடுமென்று சிறிதும் பயப்படவேண்டியதில்லை. உலகமுள்ளளவும் அவர்களின் பெருமை குறையாதென்பது சத்தியம். "உட்கார்ந்தவன் எழுந்திருப்பதற்குள்ளாக நின்றவன் நெடுந்தூரம்" என்ற முதியோர் வார்த்தை கேள்

வர்த்தமானத் திரட்டு.

சென்றமாதம் மகாத்மாஜீ அயர்லாண்டுக்கு போனதாக பிரசுரித்திருப்பதை திருத்தி அழைக்கப்பட்டார் என்று வாசித்துக் கொள்ளவும்.

சுமத்திராவில் பூகம்பமுண்டாகி பெருத்தநஷ்ட மேற்பட்டிருக்கின்றன. 67-பேர் கொல்லப்பட்டனர் 40-பேருக்கு காயம். லக்ஷக்கணக்கானபொருள் சேதம்.

பிரஞ்சுதேசத்தில் 1-மணிக்கு 50-மைல் விரைவாய் ஓடிக் கொண்டிருந்த ரயில் வண்டித்தொடர் பாதையிலகி 1-பர்லாங்கு பூமியில் உழுதுகொண்டுபோய் பிறகு இஞ்சினும் 4-வண்டிகளும் கவிழ்ந்து பெருத்த சேதமேற்பட்டிருக்கிறது. இதற்கு காரணம், ஓயமல் மழைபெய்ததினால் வண்டியோட்டி விளக்கைபார்க்காமல் விட்டுவிட்டதினால் தானென்று சொல்லப்படுகிறது.

பம்பாயில் சப் இனிஸ்பெக்டர் ஒருவருக்கு கொலைசம்பந்தமான் வழக்கில் 2-வருஷம் கடுங்காவல்தண்டனை விதிக்கப்பட்டதாம். மித்திரன்.

சீனாவில் உள்நாட்டுகலகம் மறுபடியும் ஆரம்பித்திருக்கிறார்கள்.

அடுத்த வருஷம் பம்பாயிக்கும் சீர்மைக்கும் ஆகாயவிமான போக்குவரவு ஏற்படுமென்று தெரிகிறது.

புதிதாக பள்ளிக்கூடமில்லாத ஊர்களில் பஞ்சாயத்து பாடசாலைகள் அமைக்கப்போவதாக தெரிகிறது. அப்பாடசாலையை மேல்பார்வை செய்வதில் பஞ்சாயததாருக்கே உரிமையுண்டாம்.

குடியரசு:—1929வருஷத்தில் கொஞ்சம் அதிகமான சீர் திருத்தங்கள் இந்தியாவுக்கு கொடுக்கப்போவதாக இங்கிலாண்டு பார்லிமெண்டின் யோசனை.

பம்பாயில் சுனிலால் மேட்டா கள்ளுகடைகள் தீர்வையை வருஷத்துக்கு 10-ரூபாய்மேனிக்கு குறைத்து 10-வருஷத்தில் கடையையே மூடிவிடுவதாக தீர்மானித்திருக்கிறார். மித்திரன்.

நாகபுரியில் ஜூன் மீ 15உ 55வயதுள்ள ஓர் ஆடவனுக்கு 13வயதுள்ள ஓர் பெண்குழந்தை விவாஹம் செய்து கொடுத்தார்களாம், மாப்பிள்ளைக்கு முதலில் மூன்றுவிவாகம் நடந்து பெண் ஜாதி தவறிப்போய்விட்டது, வயதுசென்ற இந்த கைம்மநாட்

டிற்கு ஓர் கைம்பெண்ணை விவாகம் செய்விக்கப்படாதா. புருஷன் மறுபடியும் கலியாணம்செய்ய பாத்தியமுண்டு? பெண்களுக்கு தானு இல்லை?

மதுரை ஸ்ரீமான் திரு. வீ. முத்தியாணப்பிள்ளையின் அன்னையார் சென்ற ஆனிமீ 32உ இரவு 10மணிக்கு உயிர்துறந்தார் அந்த அம்மையாருக்கு வயது 127 ஆகிறது.

பர்ஷியாதேசத்து குடி மதிப்பு எடுத்ததில் 146 வயதுள்ள ஓர் தாயும் அந்த அம்மையாரின் குமாரன் 117 வயதுள்ள மகனும் ஓர் வீட்டில் வசிக்கிறார்களாம்.

இந்தமாதச் சம்பவம்.

ஹைடன் ஹீசர் என்ற இடத்தில் ஓர் ஆகாயவிமானம் திடீரென்று வெடித்து வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தவர்களின் மீது விழ்ந்து 5பேர் கொல்லப்பட்டார்கள் 7பேருக்கு காயம்.

காஸிதீவில் பெரும் புசல்காரணமாக 126பேர் மரணம் 400 பேரைக் காணுமாம் 100படகு மூழ்கியும் 60படகுகள் துறைமுகத்திலிருந்தன. 80 லக்ஷம்டாலர் சேதம். 350 மாலுமிகள் உயிர்ச்சேதம்.

விடாதமழையினல் பம்பாயில் கட்டடங்கள் சில இடிந்து விழுந்துகொண்டிருக்கின்றனவாம்.

சானல்தீவுகளிலும் பூகம்பம் உண்டானதாக அறிவிக்கப் படுகிறது.

கத்தியவார் சமஸ்தானத்தில் ஓர் கோவில் குருக்களுக்கு 75வயதாகிறதாம் அவருக்கு 3 பட்டஸ்திகளிருக்க நான்காவதாக ஒரு சிறிய பெண் குழைந்தையை மணந்துகொண்டாராம். என்ன சாகிற கிழவனுக்கு பெண் ஆசை இதை கவர்மெண்டாவது சட்ட மெம்பர்களாவது தடுக்கவுமில்லை. இந்த குருக்கள்மாரால் இந்து மதத்துக்கு பெருத்த ஊழல்கிடைக்கிறது.

1925வருஷத்தில் தென்னிந்தியாவிலிருந்து பினங்கு, சிங்கப்பூர் போனவர்கள் 90,708 1924வருஷத்தைவிட 28பேர் அதிகம் போயிருக்கிறார்கள். இதில் முன்பணம் கொடுத்தழைக்கப்பட்டவர் 70,00 பேர் ஐக்கிய மலேயாநாட்டில் சுமார் 3லக்ஷத்து மூவாயிரம் இந்துக்கள் வசிக்கிறார்கள்.

என் கவலைப்படுகிறீர்கள்?

ஹனுமத் உபாசனை!

ஆச்சரியமான ஜோதிடம்!!

சகோதரர்களே!

உங்களை ஆயாசப்படுத்தும் முக்கியமான விஷயங்களைப்பற்றி சில கேள்விகளை எழுதி கவரில் நன்றாய் அடக்கம்செய்து சீல் முதலியவைகள் செய்து அனுப்புங்கள். உங்கள் கவரை திறக்காமலே உங்கள் முக்கில் விரலைவைத்து திகைக்கும்படி சரியான பதிலுடன் உங்கள் கவரையும் சேர்த்து உங்களுக்கு அனுப்பப்படும், கேள்வி எழுத ஆரம்பிக்கும் சமயத்தில் மணி மினிட்டு அல்லது நீங்கள் ஜனன மான வருஷம், மாதம் தேதி நாழிகையாவது குறிப்பிட்டு எழுதுங்கள். சட்டவிரோதம், களவு முதலியவைகளுக்கு பதில் கிடைக்கமாட்டாது. உங்கள் கவலைநீங்கி, பாக்கியத்திற்கு வழி பிறக்கும்.

கிரக தோஷத்தினால் ஏற்படும் சகலவிதமான கெடுதல்களுக்கும், சாந்தி, ஹோமம், ஜெபம் முதலியவைகள் செய்து ரக்ஷாபந்தனம் செய்து கொடுக்கப்படும்.

சார்ஜுகள்:—1-முதல் 5-கேள்விகளுக்கு ரூபாய் 1—0—0 ஐந்துக்கு மேல்பட்ட கேள்விகள் ஒவ்வொன்றுக்கும் அணா எட்டு வீதம். ஒரு வருஷ பலன் திசா புத்தி, அந்தரம்வாரியாய் பலன் எழுதியனுப்ப ரூபாய் 5—0—0. ஸ்ரீ அனுமார் ரட்சாபந்தனம் வெள்ளியில் ரூபாய் 3 அணா 8. தாம்பரம் ரூபாய் 2 அணா 8. தபால் சார்ஜ் வேறே, வெளிநாடுகளுக்கு இரட்டிப்பு கட்டணம்.

T. S. கிருஷ்ணசாமி அய்யர்,

ஜோதிஷர்,

மலையாள மாந்திரீகசாலை

விழுப்புரம் போஸ்டு, தென் இந்தியா.

ലക്കങ്ങൾ

1926 — 4

1927 — 3

1936 — 3+1 = 4.

1937 — 1